## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை

**அசல் வழக்கு எண்.** 176/2020

2023 ம் ஆண்டு ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 02 ம் நாள் புதன்கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW1 வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியில் 9 வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 திரு.க.ராக்கப்பன் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | தங்கராஜ் | **தொழில் :** | டீர்நுடு பணி ஓய்வு |
| **தந்தை/கணவர் பெயர் :** | சீனிசாம்பான் | **சமயம் :** | இந்து |
| **ஊர் :** | கருப்பூர் | **வயது** | 67 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | - |

**02.082023**

**<u>முதல் விசாரணை</u>**

நான் அசல் வழக்கில் 2 ம் வாதி ஆவேன், நான் எனது முதன்மை சாட்சியத்தை மற்ற வாதிகளுக்கு சார்பாகவும் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 27.03.2017 ல் தாவா புல எண்ணிற்கான ROR சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும். 25.03.1958 ல் தாவா புல எண் மற்றும் வேறு பல புலர எண்ணிற்கு 2-ம் வாதியின் தகப்பனார் பெயருக்கு பட்டுக்கோட்டை வட்டா'சியர் அவர்களால் செட்டில்மெண்டில் கொடுக்கப்பட்ட பட்டா அசல் **வா.சா.ஆ.2** ஆகும். 30.06.1974 ல் தாவா புல எண்ணிற்கான நில உடமை குறிப்போடு அசல் **வா.சா.ஆ.3** ஆகும். 25.06.1963 ல் தாவா புல எண்ணிற்கு 1-ம் வாதி பெயரில் செலுத்திய கிஸ்தி ரசீது அசல்

**வா.சா.ஆ.4** ஆகும். 02.03.1965 ல் தாவா புல எண்ணிற்கு 1-ம் வாதி பெயரில் செலுத்திய கிஸ்தி ரசீது அசல் **வா.சா.ஆ.5** ஆகும். 31.03.1966 தாவா புல எண்ணிற்கு 1-ம் வாதி பெயரில் செலுத்திய கிஸ்தி ரசீது அசல் **வா.சா.ஆ.6** ஆகும். 21.04.1967 தாவா புல எண்ணிற்கு 1-ம் வாதி பெயரில் செலுத்திய கிஸ்தி ரசீது அசல் **வா.சா.ஆ.7** ஆகும். 26.04.1970 தாவா புல எண்ணிற்கு 1-ம் வாதி பெயரில் செலுத்திய கிஸ்தி ரசீது அசல் **வா.சா.ஆ.8** ஆகும். 02.04.1971 தாவா புல எண்ணிற்கு 1-ம் வாதி பெயரில் செலுத்திய கிஸ்தி ரசீது அசல் **வா.சா.ஆ.9** ஆகும். 19.03.1972 தாவா புல எண்ணிற்கு நான் எனது தந்தை பெயரில் செலுத்திய கிஸ்தி ரசீது அசல் **வா.சா.ஆ.10** ஆகும். 13.04.1976 ல் தாவா புல எண்ணிற்கு நான் எனது தந்தை பெயரில் செலுத்திய கிஸ்தி ரசீது அசல் **வா.சா.ஆ.11** ஆகும். 10.10.2018 ல் நான் வழக்கறிஞர் மூலமாக எதிர்வாதிகளுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.12** ஆகும். 11.10.2018 ல் மேற்படி அறிவிப்பை 3ம் எதிர்வாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சாலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.13** ஆகும். 13.10.2018 ல் மேற்படி அறிவிப்பை 1ம் எதிர்வாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சாலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.14** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.